சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2020

13.06.2025

வா.சா.1 திரு. சேகர், த/பெ. கண்ணுசாமி

**1, 2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2, 3, 4 வாதிகள் என் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 5 மற்றும் 6 ஆம் பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரிகள். 5, 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து வாதிகளுடன் சேர்ந்து வழக்கு தொடர முன்வராததால் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை எங்களுக்கு கொடுக்க வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்குண்டான பட்டா எண் சொத்து விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 3/17 என குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்திற்கு பட்டா எண் 475 ஆகும். தாவா பிராதில் பட்டா எண்ணை சொல்ல மறந்துவிட்டேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் கொடுத்த அறிவிப்பில் பட்டா எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும் என்றால் கிராம சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டு சலவை தொழிலாளர்களுக்காக கொடுக்கப்பட்ட விவரம் தெரியும். தாவா சொத்து அரசு வருவாய்துறை கணக்குகளில் இன்றைய தேதிவரை அரசுக்கு உரிய புஞ்சை நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அரசு மதிப்பு இல்லை என பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்யக்கோரி நாங்கள் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணங்களில் தாவா சொத்து 62 நபர்களுக்கு அனுபவத்திலிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்களில் 49 வது பெயர் ராமசாமி என உள்ளது என்றால் சரியல்ல. கிராம சமுதாய நிலம் என்பது கிராமத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்படும் மானிய நிலம் என்றால் சரிதான். 1, 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் சரிதான். ராமசாமி எங்கள் கிராமத்தில் சலவை தொழில் செய்து வந்தார்

என்றால் சரியல்ல. ராமசாமி கோமல் கிராமத்தில் அக்ரஹாரத்தில் வசித்து வந்தார். அவர் தாவா சொத்தில் உள்ள கிராமத்தில் தான் திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்த கூரை வீட்டில் ராமசாமி குடியிருந்தார் என்றால் சரிதான். ராமசாமிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான மூலப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாய் பத்திரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. மாரியம்மாள் வசிக்கும் 10 குழி இடத்தை பொறுத்து பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். மாரியம்மாள் வசிக்கும் 10 குழி நிலம் புல எண் 3/17 ல் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் மாரியம்மாள் வசிப்பதால் அவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன். பிராதில் 5 ஆம் பிரதிவாதி 3 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கோவிந்தராஜ் கட்டிடம் கட்டுவதற்கு முன்பு காலிமனையாக தான் இருந்தது. கோவிந்தராஜ் கட்டிடம் கட்டும் போது எவ்வளவோ சொல்லிப்பார்த்தோம் அவர்கள் கேட்கவில்லை. பஞ்சாயத்தார்களிடம் சொல்லியும் கோவிந்தராஜ் கேட்காததால் வழக்கு தாக்கல் செய்துவிட்டோம். முதலாம் பிரதிவாதி வசிக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு, வீட்டு வரி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து கோவிந்தராஜ் குடியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு வீட்டு வரி உள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து குறித்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 2009 ஆம் வருடம் கிராமம் சார்பாக ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. புல எண் 3/17 ல் ஒரு ஓட்டு வீடு, 2 கூரை வீடுகள், 2 மாடி வீடுகள், ஒரு தகர கொட்டகை போட்ட வீடும் உள்ளது. ஓட்டு வீட்டில் 3 ஆம் பிரதிவாதி கோவிந்தராஜ் வசித்து வருகிறார். கூரை வீட்டில் நானும் எனது அண்ணன் 5 ஆம் பிரதிவாதியும் வசித்து வருகிறோம். ஒரு மாடி வீட்டில் 1 ஆம் பிரதிவாதி மகன் கார்த்திக்ராஜாவும் மற்றொரு மாடிவீட்டில் ரவிசங்கரும் வசித்து வருகிறார்கள். தகர கொட்டகையில் யாரும் குடியிருக்கவில்லை. தாவா சொத்தில் உள்ள 4 வீடுகளுக்கு மட்டும் மின் இணைப்பு இல்லை. அனைத்து வீடுகளுக்கும் சொத்து வரி உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்தில் நான் ஒரு வீடு கட்டி வருகிறேன். நான் கட்டும்

வீட்டிற்கு மின் இணைப்பு வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு பொருளாதார வசதி இல்லாததால் மின் இணைப்பு வாங்கவில்லை. கட்டிடம் கட்டுவதற்கு மின்சாரம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. அருகில் உள்ள வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வோம். நான் கட்டி வரும் வீட்டிற்கு இதுநாள் வரை அரசு மானியம் பெற்று 4,50,000/- செலவு செய்திருக்கிறேன். எனக்கு போதிய வருமானம் இருந்தும் மின் இணைப்பு வாங்க பொருளாதார வசதியில்லை என பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு நபர் தனக்கு உரிமையான சொத்தை தான் பாகம் செய்துக்கொள்ள முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சிங்காருக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் காணப்பட்ட சொத்தில் கிராம சமுதாய சொத்து என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகபத்திரத்தில் கண்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். பிராதில் தாவா சொத்து கிராம சமுதாய சொத்து என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் அசல் பத்திரம் 5 ஆம் பிரதிவாதியிடம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பட்டா மாற்றம் குடவாசல் ஜமாபதியில் மனு கொடுத்ததால் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்த மனுவில் 1 வருடம் காத்திருக்க சொன்னார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் 3/17 ல் 29.2/3 நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 16 செண்டு தான் கேட்டேன். அறிவிப்பில் 29 செண்ட் சொல்லிவிட்டு வழக்கில் 16 செண்ட் மட்டும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பதிலறிவிப்பில் கோவிந்தராஜுக்கு பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டியிருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்திலும் 29 செண்ட் நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் புல எண் 3/17 ல் மதிப்பு காணப்பட்டுள்ளதா என்றால் கிராம சமுதாய நிலம் என்பதால் அதில் குறிப்பிடவில்லை. தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான ஆர்எஸ்ஆர் தாக்கல் செய்யவில்லை ஆனால் வாங்கிவிட்டேன். தாவா சொத்து என்பது கிராம சமுதாய சொத்து என்பதால் தனிப்பட்ட நபருக்கு சொந்தமான சொத்து இல்லை என்றாலும் சரியல்ல. தாவா

சொத்திற்கு சிங்காரு எந்த ஆவணமும்எழுதிக்கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பூர்வீகமாக வாதிகளும், 1 முதல் 3, 5, 6 பிரதிவாதிகளும் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறு என்று சொன்னால் சரியல்ல. கிராம சமுதாய சொத்தை பொறுத்து யாரும் பதிவு ஆவணம் ஏற்படுத்த இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண் மொத்த விஸ்தீரணம் 13.5 ஏர்ஸ் என்றால் 33 செண்ட் ஆகும். 13.5 ஏர்ஸ் நிலத்தில் மொத்தம் 75 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. கிராம சமுதாய சொத்தை அனுபவிக்க மட்டும் முடியும் என்றாலும் உரிமை கோர இயலாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் 69 நபர்கள் உரிமையாளர்களாக இருப்பது தெரிந்தும் அவர்களை சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. எனவே அசல் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.